என்ற அளவிலும் எண்ணெய் விலை இருக்கிறது. அரசு இதற்காக ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை. இது ஒரு மியூட்சுவல் அன்டர்ஸ்ட்டாண்டிங்கில் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலே தான் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கின்றது. தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவாகும். இப்போது புதிதாக பொறுப்பேற்று இருக்கின்ற உணவு அமைச்சர் அவர்கள் 4–12–1986லே மீண்டும் எண்ணெய் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் சங்கங்களுடைய பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த இருக்கின்றார்கள். பாமோலின் மத்திய அரசு 3 ஆயிரம் டன் நமக்கு ஒதுக்கீடு செய்து கொண்டிருந்தது.பின்னர் 5 ஆயிரம் டன்னாக ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். நம்முடைய தேவை 12 ஆயிரம் டன். 12 ஆயிரம் டன் ஒதுக்க வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. மீண்டும் வலியுறுத்தி வருகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது தேவையில் 3 சதவிகிதம் நல்லெண்ணெய் கூட கிடைக்கவில்லை. வெளி மாநிலங்களிலிருந்து 80 பர்சென்ட் எண்ணெய் இறக்குமதி செய்கிறோம். இந்த நிலைமைகளினால் அபாயகரமான நிலை ஏற்படுகின்றது. முதல்தரமான எண்ணெய் கிடைக்காமல் 2–ம் தரம் 3–ம் தரம் எண்ணெயும், கலப்படம் அதிகரிக்கின்ற நிலைமைகளும் இருக்கின்றன. ஆகவே பொதுமக்களுக்குத் தரமான நல்லெண்ணெய் கிடைக்கவும், குறைந்த விலையில் கிடைக்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமையல் எண்ணெய்கள் தரமாகவும் கிடைக்க வேண்டும், அதே நேரத்திலே விலை குறைவாகவும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்பட்டு அந்த கூட்டத்தில் சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து அதை அமல் நடத்த 4–12–1986ல் மீண்டும் எண்ணெய் உற்பத்தியாளர்கள், எண்ணெய் வியாபாரிகள் ஆகியவர்களோடு உணவு அமைச்சர் அவர்கள் பேச இருக்கின்றார்கள்.

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன் :—

(1) 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கையிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகளின் மீது பொது நிறுவனங்கள் குழு (1982–83) அளித்த இருபத்து இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை.

[டாக்டர் கே. சமரசம்] [1986 நவம்பர் 24

(2) 1970–71 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் குறித்த பத்திகள் மீதான குழுவின் (1980–81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள (வணிகத் துறைகள் பற்றிய) பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்ததல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழ்ங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(ஆ) பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.